முருகப்பெருமான் துணை

**மகான் யோகானந்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**01.11.2021,** திங்கட்கிழமை

1. அப்பனே ஞானத் தலைவனின்
அவதார மகா சூட்சுமமே
சுப்பனே விரும்பக் கலியுகத்தில்
சுத்தநெறி அருளி வழிநடத்தும்
2. வழிநடத்தும் ஆறுமுக அரங்கனே
வையகத்தில் உன் பெருமை கூறி
தெளிவுபட பிலவ துலை திங்கள்
தேசிகன் கேட்க மூவைதிகதி சோமவாரம்
(பிலவ வருடம் ஐப்பசி மாதம் 15ம் நாள், 01.11.2021 திங்கட்கிழமை)
3. வாரமதில் யோகானந்தர் யானும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
ஆறுமுக ஞானி உபதேசங்கள்
அறமாக மக்களை நோக்கிவர
4. வருகவே வணங்கி ஏற்பவர்
வழிமொழிந்து உலகில் தொடர்பவர்
தரும வழிகளை அடைவதுடன்
தவசியாகும் நிலையும் அடைவர்
5. அடையவே பிரணவக் குடிலில்
ஆறுமுகப் பெருமான் நடத்தும்
தடையிலா ஞான பூசையிலும்
தருமப் பாதையிலும் இணைந்து
6. இணைந்துமே தொடர்ந்து வர
எந்நாளும் ஞானிகள் மேலாக
துணைவா தொடர்ந்துவா என
தொண்டர்களாகித் துணிந்து வர
7. வருகவே மக்களில் பலரும்
வரம்கிட்டி தருமவான்களாக
முருகப்பெருமான் அருளைப் பெற்று
முழுமை பெற்ற ஞானிகளாவர்
8. ஆவரே கலியில் அரங்கன் தேடும்
ஆற்றல் மிக்க ஞானப்படைகள் என
புவனம் மெச்ச மாற்றங்கிட்டி
புவியெங்கும் ஞானிகள் ஆட்சி

9. ஆட்சி கண்டு கலியுகமும்
ஆறுமுகனார் ஆளுமையாகவும்
மாட்சிமைமிக்க தலைவர்கள்
மரணம் வெல்லும் சக்திகளாகி

10. ஆகியே ஞான ஆட்சிதனை
அரங்கன் ஆறுமுகனாகவே
அகிலம்தனில் வெளிப்பட்டு ஏற்றம்
ஆற்றல்பட காணக் கூடும்

11. கூடவே குருவரங்கன் குடிலில்
குருவாரமும் தொடர் பூசை
ஈடேற தருமம் மிகுதியாக
எல்லாம் வல்ல இறைபலமுடன் மாற்றம் காணும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–